**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.228/2012**

2025=ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 V. சாந்தி,வயது 58, க/பெ வெங்கடரத்தினம்**

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 10 மற்றும் 11 தரப்பு)**

இவ்வழக்கை தாக்கல் செய்தவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் கணவர் ஆவார். இவ்வழக்கை என் கணவர் தாக்கல் செய்த ஆரம்ப காலத்தில் மேற்படி வழக்கு விவரங்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு விவரங்கள் தெரியும். எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால் வழிப் பிரச்சினைக்காக தாக்கல் செய்தார். தற்போதும் வழிப்பாதை உள்ளதா என்றால் நடைப்பாதைதான் உள்ளது. வழிப்பாதை இல்லை. 15 அடி வழிப்பாதை இல்லை என்றாலும், நடைப்பாதைதான் உள்ளது என்றால் சரிதான்.

2. நடைபாதை என்பது சுமார் 2 அடி, 3 அடியில்தான் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் யார் பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதியாகிய சேஷாசலம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இவ்வழக்கில் சொல்லியுள்ள வழிப்பாதை 15 அடியிலிருந்து தற்போது 3 அடி உள்ளது என்பதற்கு நான் நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் ஆவணங்களை கொடுத்துள்ளேன்.

3. மேற்படி ஆக்கிரமிப்பு செய்துள்ள 15 அடி ரோடு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பொது பாதை ஆகும். மேற்படி பொது பாதை என்பதற்கு நான் சர்வே எண், வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளனே். இவ்வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞர் ஆணையர் பார்வையிடும் போதும் 3 அடி பாதையாக இருந்தது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு பாதையை பொது வழி பாதையாக பயன்படுத்த மீட்டு தர பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. பொது வழியை சரி செய்ய வேண்டும் என்றுதான் இவ்வழக்கை நான் தாக்கல் செய்தேன்.

4. நான் தாக்கல் செய்த இவ்வழக்கில் தாசில்தார் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவசியம் அற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. தாசில்தார் மற்றும் மாவட்ட ஆட்சியர் தரப்பில் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi,
District Munsif,
District Munsif Court,Arni